கல்வி மறுசீரமைப்பு மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில், மகாராஷ்டிரா,பூனே

நிபுன்பாரத் கற்றல் பயிற்சி ஆய்வு

பாடம் : தமிழ் வகுப்பு - மூன்று

---

கற்றல் முடிவு எண் : 1 ஒரு கதை, கவிதை அல்லது உரையாடலின் நிகழ்வுகள் மற்றும் கதாபாத்திரங்கள் பற்றி பேசுதல்.

ஆசிரியர் குறிப்புகள்:

- குழந்தை தொனி மற்றும் தாளத்தில் உரையாடலை ஆசிரியர் வாசிக்கவும்.
- உரையாடலை வாசிக்கும் முன், மாணவர்களிடம் உரையாடலை கவனமாக கேட்கவும், அதனைப் பற்றி கேள்விகள் கேட்கப்படும் என்று கூறவும்.
- உரையாடலை ஒவ்வொரு குழந்தைக்கும் தனியாக காட்டி, அதன் அடிப்படையில் பின்வரும் கேள்விகளை கேட்கவும்.
- ஒரு கேள்விக்கு பதிலளிக்க மாணவர்களுக்கு 10 வினாடிகள் கொடுக்க வேண்டும். 10 வினாடிகள் பதில் கூறவில்லை எனில், அடுத்த கேள்வியை கேட்கலாம்.

வாசிக்கவும் :

| | | |
|---|---|---|
| கிளி | : | காலை வணக்கம் அணிலாரே! |
| அணில் | : | வணக்கம். உனது சத்தம் இரவு முழுவதும் ‘கீச்கீச்’ என்று கேட்டுக் கொண்டே இருந்ததே! சரியாக தூங்கவில்லையா? |
| கிளி | : | ஆமாம் அணிலாரே! வண்டிகளின் வெளிச்சம், இரைச்சல், அதிர்வுகள் மற்றும் புகையினால் சரியாகத் தூங்கவில்லை. |
| மரகதப்புறா | : | எனக்கும் அதே பிரச்சனைதான். |
| குரங்கு | : | வணக்கம் நண்பர்களே! மனிதர்கள் காடுகளை அழித்து சாலைகளை உருவாக்குகின்றனர். அதனால்தான் இந்த பிரச்சனைகள் எல்லாம்... |
| அணில் | : | இதற்கு தீர்வுதான் என்ன? |
| குரங்கு | : | தீர்வு விரைவில் கிடைக்கப் போகிறது அணிலாரே! இரவு நேரத்தில் வாகனங்கள் காட்டுக்குள் செல்ல அனுமதி கிடையாது என்ற சட்டம் நம் காட்டுக்கும் விரைவில் வரப்போகிறது. |
| அனைவரும் | : | மிக்க மகிழ்ச்சி... மிக்க மகிழ்ச்சி... |

| கேள்வி | பதில் |
|---|---|
| 1) இந்த உரையாடலில் எத்தனை பேர் கலந்து கொண்டனர்? | நான்கு |
| 2) சத்தம் எவ்வாறு கேட்டது? | ‘கீச் கீச்’ என்று |
| 3) கிளி எதனால் தூங்க முடியாமல் இருந்தது? | இரைச்சை, வெளிச்சம், அதிர்வால் |
| 4) மனிதர்கள் காடுகளை அழித்து எதை உருவாக்குகிறார்கள்? | சாலைகள் |
| 5) பிரச்சனை தீர என்ன தீர்வு என குரங்கு கூறியது? | இரவு நேரத்தில் வாகனங்கள் காட்டுக்குள் செல்ல அனுமதி கிடையாது என்ற சட்டம் வரப்போகிறது. |

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 3 |
| 2-3 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 2 |
| ஒரு கேள்விக்கு மட்டும் பதில் கூறல் | 1 |
| எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்க இயலவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 2 சொந்த மொழியில் கதை சொல்வது, தாளம், சுரம் தவறாமல் கவிதை வாசிப்பது.

ஆசிரியர் குறிப்பு:

- குழந்தைகள் தாங்கள் படித்த அல்லது கேட்டதை நினைவுபடுத்தும் படி ஆசிரியர் கூறவும்.
- கதையை நினைவுபடுத்த 20 வினாடிகள் கொடுக்கவும். பாரம்பரிய முறையில் பெயர்களை நினைவில் வைத்துக் கொள்ள கூறவும்.
- இப்போது கதை சொல்ல சொல்லுங்கள். படித்த அல்லது கேட்ட எந்த கதையையும் கூறச் சொல்லவும்.
- கதை சொல்ல 2 நிமிடங்கள் ஒதுக்குங்கள்.

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 1. கதை உள்ளடக்கத்திற்கேற்ப துவக்கம், நடு மற்றும் முடிவு வரிசையில் 10 முதல் 12 வாக்கியங்கள் கொண்ட கதை கூறினால் | 3 |
| 2. கதை உள்ளடக்கத்திற்கேற்ப துவக்கம், நடு மற்றும் முடிவு வரிசையில் 6 முதல் 9 வாக்கியங்கள் கொண்ட கதை கூறினால் | 2 |
| 3. உள்ளடக்கத்திற்கேற்ப 4 முதல் 5 வாக்கியங்கள் கொண்ட கதை கூறினால் | 1 |
| 4. ஒரே ஒரு வாக்கியம் கூறுதல் அல்லது பேசவே இல்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 3 தகவலுடன் அல்லது தகவல் இல்லாமல் ஒரு பத்தியை வாசிப்பது, பேசுவது.
எ.கா: பத்தியின் அடிப்படையில் படங்கள், ஒலி குறியீடுகள் பற்றிய தவல்களின் அடிப்படையில் ஒரு பத்தியை புரித்துக் கொள்ளல்.

ஆசிரியர் குறிப்பு:

- ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு வாசிக்க பத்தியுடன் கூடிய அட்டையை தர வேண்டும்.
- பத்தியை கவனமாக வாசிக்கும்படி கூறவும். பத்தியை படித்தபின் கேள்விகள் கேட்கப்படும் என்பதை தெரியப்படுத்தவும்.
- ஒரு குழந்தை ஒரு வார்த்தையை வாசிக்க 5 வினாடிகளுக்கு மேல் தடுமாறினால் அடுத்த வார்த்தையை வாசிக்கக் கூறவும்.

அடையாளம்:

1. எந்த வார்த்தையும் படிக்காமலோ அல்லது தவறாக படித்தாலோ அதை ( / ) என்று குறிக்கவும்.
2. சரியாக வாசிக்கப்பட்டாலோ, சுயமாக திறம்பட வாசித்தாலோ அதை ( $\varnothing$) என்று குறிக்கவும்.

வாசிக்கவும் :

கோடை விடுமுறைக்கு கமலாவும் மாறனும் தங்கள் தாத்தா-பாட்டி வாழும் கிராமத்துக்குச் சென்றனர். சாலையில் இருபுறமும் பச்சை பசேலென வயல்வெளிகளும் மரங்களும் அவர்களை வரவேற்றன. அவ்வூரிலுள்ள குளத்தில் தாத்தாவுடன் மாறன் குளித்து மகிழ்ந்தான். மாந்தோப்பில் ஆண்களும், பெண்களும் தரையில் அமர்ந்து உணவு அருந்துவதைப் பார்த்து வியப்புற்றனர். மயில், கிளி, குயில் போன்ற பறவைகளைக் கண்டு அவற்றை போன்று ஒலிகளை எழுப்பி மகிழ்ந்தனர். வீட்டிலுள்ள அம்மி, ஆட்டுக்கல், உரல், திரிகல், தயிர் கடையும் மத்து போன்ற அரிய பொருள்களைக் கண்டு வியப்புற்றனர். வானிலே தோன்றிய வெண்மதியையும், விண்மீன்களையும் கண்டு உற்சாகம் அடைந்தனர்.

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 1. சரியான வேகத்தில் தெளிவான உச்சரிப்புடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 30 முதல் 50 வார்த்தைகளை ஏற்ற இறக்கத்துடன் நிறுத்தல், குறியீடுகளுடன் வாசித்தல். | 3 |
| 2. சரியான வேகத்தில் தெளிவான உச்சரிப்புடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 29 முதல் 10 சொற்களை இணைத்து சுய முன்னேற்ற வாசிப்பு. | 2 |
| 3. நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கும் மேலாக 9 முதல் 5 வார்த்தைகளை திணறல், வார்த்தைகள் எழுத்துகளை பிரித்து வாசித்தல். | 1 |
| 4. ஒரு வார்த்தையும் சரியாக படிக்கவில்லை. எதையும் சொல்லவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 4 மாணவர்கள் இலக்கியம் மற்றும் பாடப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை படித்து பொருள் புரிதல். கற்றல் முடிவு எண் 3இல் கொடுக்கப்பட்ட பத்தியை இதற்காக பயன்படுத்தவும்.

ஆசிரியர் குறிப்புகள்:

- மாணவர்கள் பத்தியை படிப்பதை நிறுத்தினால், பத்தியை அவரிடமிருந்து பறிக்க வேண்டாம்.
- மாணவர் படித்த பின் அதன் அடிப்படையில் கேள்வி கேட்கவும்.
- 15 வினாடிகளுக்கு பதிலளிக்க முடியாவிட்டால், 'பதிலளிக்கவில்லை' எனக் குறிப்பிடவும்.
- கேள்வியை இரண்டு முறைக்கு மேல் கேட்க வேண்டாம். மாணவர் 'எனக்குத் தெரியாது' என்று கூறினால் O/ என்று குறிக்கவும்.

| கேள்வி | பதில் |
|---|---|
| 1. கோடை விடுமுறைக்கு கிராமத்திற்கு சென்றவர்கள் யார்? | கமலா, மாறன் |
| 2. மாறன் யாருடன் குளத்தில் குளித்து மகிழ்ந்தான்? | தாத்தாவுடன் |
| 3. ஆண்களும், பெண்களும் எங்கு அமர்ந்து உணவு அருந்தினர்? | மாந்தோப்பில் |
| 4. எந்தப் பறவைகளைக் கண்டு மகிழ்ந்தனர்? | மயில், கிளி, குயில் |
| 5. வீட்டிலுள்ள அரிய பொருள்கள் எவை? | அம்மி, ஆட்டுக்கல், உரல் |

மாணவர்கள் அளிக்க வேண்டிய சரியான பதில்கள் : 5

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| உள்ளடக்கத்திற்கேற்ப 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 3 |
| உள்ளடக்கத்திற்கேற்ப 2 முதல் 3 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 2 |
| உள்ளடக்கத்திற்கேற்ப ஒரே ஒரு கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 1 |
| எந்த கேள்விக்கும் பதிலளிக்கவில்லை / தவறாக பதில் கூறல் | 0 |

கற்றல் முடிவு எண் : 5 சரியான வார்த்தைகள் / வாக்கியங்களைப் பயன்படுத்தி எழுத முயற்சி செய்தல் (பாரம்பரிய எழுத்து மற்றும் பலவகை விலைகள்)

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் பட அட்டைத்தாளை மாணவர்களிடம் கொடுக்கவும். அதை உற்று நோக்க கூற வேண்டும்.
- மாணவர்கள் படத்தைப் பார்த்து வாக்கியத்தைப் பொருத்த அதிகபட்சம் ஒரு நிமிடம் கொடுக்கவும்.
- கவனித்து நான்கு முதல் ஐந்து வாக்கியங்கள் எழுதச் சொல்லவும்.



மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறை | மதிப்பெண் |
|---|---|
| படத்தைப் பார்த்து 4 முதல் 5 வாக்கியங்கள் சரியான நிறுத்தற் குறியீடுகளுடன் எழுதுதல். | 3 |
| படத்தைப் பார்த்து 2 முதல் 3 வாக்கியங்கள் சரியான நிறுத்தற் குறியீடுகளுடன் எழுதுதல். | 2 |
| படத்தைப் பார்த்து ஒரே ஒரு வாக்கியம் மட்டும் சரியாக எழுதுதல். | 1 |
| ஒரு வாக்கியம் கூட எழுதவில்லை. | 0 |

❑❑❑